நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 14.12.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**மன்றப் பொருள்**

மேட்டூர் நகராட்சி பகுதிகளில் சிறப்பு சாலை திட்டம் (Special Road Programme) 2020-2021ம் ஆண்டின் கீழ் ரூ.1650.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலை திட்ட மானிய நிதி (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| மேட்டூர் | 16.50 | 14.85 | 1.65 |

எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | சிப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான பாரதி நகர் ரோடு, காமராஜர் நகர் குறுக்கு வீதி மற்றும் முத்தாலம்மன் காடு பிரதான சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.30 | 5.50 | 146.00 | I |
| 2 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான ஸ்டேட் பேங்க் குவாட்டர்ஸ் முன் பக்க சாலை, ராஜாஜி நகர் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதி , ஆண்டிகவுண்டர் நகர் வடக்கு பக்க தெரு , அம்மன் நகர் தெற்கு பக்க தெரு மற்றும் ராஜ கணபதி நகர் குறுக்கு வீதி, தூக்கணாம்பட்டி ஆர்.டி.ஒ பங்களா பிரதான மற்றும் குறுக்கு வீதிகளில் ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.41 | 5.50 | 160.00 | II |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான டாக்டர்.சுப்பராயன் நகர் குறுக்கு தெரு, சுப்பரமணியார் கோவில் வடக்கு பக்க சாலை காவேரி நகர் குறுக்கு வீதி அப்பு வீடு பின் பக்க தெரு, பி.டபுள்யூ.டி குவாட்டர்ஸ் அருகே மேற்கு பிரதான சாலை முதல் கிழக்கு பிரதான சாலை ஆகியவற்றை இணைக்கும் சாலை , கூலி லைன் டாய்லெட் வடக்கு பக்க தெரு மற்றும் ஆடு வதைக்கும் கூடம் முன் புற சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.31 | 5.50 | 151.00 | III |
| 4 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான மருத்துவமனை காலனி முதல் மற்றும் இரண்டாம் பிராதான சாலை மற்றும் குறுக்கு வீதி,மருத்துவமனை காலனி மேற்கு பக்க வீதி, குமரன் நகர் நகராட்சி பள்ளி முன் பக்க சாலை , பொன்னகர் பிரதான மற்றும் குறுக்க வீதி (திலீபன் நகர்) ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.71 | 6.00 | 193.00 | IV |
| 5 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான வட்டார போக்குவரத்து அலுவலக சாலை, வ.உ.சிநகர் குறுத்தெரு, தங்கமாபுரி பட்டிணம் நகராட்சி துவக்கப்பள்ளி முன்புற சாலை மற்றும் தங்கமலை முருகன் கோவில் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.00 | 6.00 | 113.00 | V |
| 6 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான சேலம் கேம்ப் சர்ச் ரோடு, போலீஸ் ஸ்டேசன், மில்குவாட்டர்ஸ் சாலை, பாரதிநகர் சாலை மற்றும் மகப்பேறு மருத்துவமனை முதல் சாஸ்திரி நகர் சுடுகாடு செல்லும் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.80 | 6.00 | 174.00 | VI |
| 7 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான மாதையன் குட்டை சுடுகாடு செல்லும் சாலை, ஸ்டேட் பேங்க் பணியாளர் குடியிருப்பு சாலை மற்றும் எலிகரடு தெற்குபுற சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.51 | 6.00 | 152.00 | VII |
| 8 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான புனித மரியன்னை பள்ளி சாலை, ஆர்.இ.குடியிருப்பு சாலை, டாக்டர். | 1.89 | 6.00 | 172.00 | VIII |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுப்ராயன் நகர் சாலை மற்றும் நகராட்சி அலுவலகம் முதல் இந்தியன் வங்கி வரை மற்றும் நகராட்சி அலுவலகம் முதல் ஆணையாளர் குடியிருப்பு வரை செல்லும் சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | | | | |
| 9 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான காவேரி நகர் மெயின் ரோடு, காளியம்மன் கோவில் முதல் பெரியண்ண கவுண்டர் தெரு வரை உள்ள சாலை தலைமை ஆசிரியர் குடியிருப்பு பகுதிமுதல் நேரு நகர் வரை செல்லும் சாலை மற்றும் ஹோலி ஏஞ்சல் பள்ளி சாலை ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 2.06 | 6.00 | 196.00 | IX |
| 10 | மேட்டூர் நகராட்சியில் பாதாள சாக்கடை முடிவுற்று பழுதடைந்த சாலைகளான பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி முன் செல்லும் சாலை குமரன் நகர் சாலை, போலீஸ் குடியிருப்பு சாலை ,ஸ்டேட் பேங்க் குடியிருப்பு முன்புற சாலை, குள்ளவீரன் பட்டி நீருந்து நிலையம் முன் புற சாலை, ஏடிசி டிப்போ ரோடு மற்றும் மசூதி தெரு ஆகியவற்றில் தார் சாலை மேம்பாடு செய்தல் | 1.90 | 6.00 | 193.00 | X |
| | **மொத்தம்** | **15.890** | **6.00** | **1650.00** | |

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3470/2020/இ1)**

**தீர்மான எண் 174 நாள் 14.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 30.12.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**<u>மன்றப் பொருள்</u>**

**1.** மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிம இனங்களை அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.19.09.2008ன் படி 01.04.2021 முதல் 31.03.2024 முடிய உள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் உரிமங்களை ஒப்படைப்பதற்கும், ஏல விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்யவும், ஏல அறிக்கை மற்றும் கட்டுப்பாடு சிறப்பு நிபந்தனைகளை உள்ளூர் அச்சகத்தில் அச்சடிக்கவும், இதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | உரிம இன விவரம் |
|---|---|
| 1. | மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 2. | மேட்டூர் கேம்ப் தினசரி அங்காடியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 3. | மேட்டூர் கேம்ப் மீன் அங்காடியில் உள்ள 16 கடைகளில் இறைச்சிக் கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 4. | சேலம் கேம்ப் தினசரி அங்காடியில் இறைச்சிக் கடை (எண்.9 மற்றும் 10 உட்பட) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 5. | மேட்டூர் கேம்ப் நவீன ஆடு வெட்டும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 6. | மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 7. | மேட்டூர் புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 8. | ஆடி பெருக்கு (ஆடி 18 மற்றும் ஆடி 28) ஆகிய இரண்டு நாட்கள் திருவிழாக் காலத்தில் பாதை ஓரங்களில் காவேரி பாலம், ஒர்க்ஷாப் கார்னர், அணை முனியப்பன் கோவில், பெரும் பகுதி 10, சர்ப்பிளஸ் பாலம் ( வியாழன் சந்தை பார்க் ரவுண்டானா பகுதி நீங்கலாக ) கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 9. | பேருந்து நிலையத்திற்குள் உள்ள நகராட்சி சைக்கிள் நிறுத்தும் இடத்தை ஒட்டி பூக்கடை வைத்து கொள்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 10. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 427 தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் |
| 11. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 42 மாமரங்கள் மற்றும் 3 நாவல் பழ மரங்களிலிருந்து பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் |
| 12. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள யானைப்புல் வளர்த்து அதன் பலன்களை அனுபவிக்கும் உரிமம் |
| 13. | சேலம் கேம்ப் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 14½ ஏக்கர் புன்செய் நிலத்தை விவசாயத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் உரிமம் |
| 14. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 15 இலவம்பஞ்சு மரங்களின் இலவம் பஞ்சினை மட்டும் பலன் அனுபவிக்கும் உரிமம் |
| 15. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் |
| 16. | முனியப்பன் கோவில் பகுதி கட்டணக் கழிப்பிடத்தில் வசூல் செய்யும் உரிமம் |
| 17. | வார்டு எண்.15, நான்கு ரோடு பாலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள குளியலறையுடன் கூடிய கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 18. | மாதையன் குட்டை I.T.I. அருகில் உள்ள வார்டு–பி, பிளாக்–15, நகர புல எண்.8, 1 ஹெக்டேர் 4488.0 ச.மீ பரப்பளவுள்ள புன்செய் நிலத்தில் விவசாயம் செய்து கொள்ளும் உரிமம் |
| 19. | சேலம் கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

அ) வரிசை எண்.1 முதல் 19 வரையில் கண்டுள்ள உரிம இனங்களை 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிக்கையை அச்சடிக்கவும் மற்றும் ஏல அறிவிக்கையை நாளிதழில் விளம்பரம் செய்யவும் ஆகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008–ல் கண்டுள்ளபடி முதலாம் ஆண்டு (2021-2022) கோரப்படும் உரிமத் தொகையில், இரண்டாம் ஆண்டிற்கு (2022-2023) 5% உயர்வு செய்யவும், மூன்றாம் ஆண்டில் (2023-2024) இரண்டாம் ஆண்டின் உரிமத் தொகையில் 5% உயர்வு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) 2018-2019 முதல் 2020-2021 முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு ஏற்கனவே உள்ள பொது ஏலம் மற்றும் பொது சிறப்பு நிபந்தனைகளை நீட்டித்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண் 175 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**2.** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38162/பி3/2019-3, நாள்.22.01.2015-ன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 47 பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் தூய்மைப்பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு, அதன் மூன்றாண்டு அனுமதி காலம் 31.12.2020 உடன் முடிவடைகிறது. ஏற்கெனவே, ஒப்பந்த அடிப்படையில் 47 பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணிகள் செய்து வரும் M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்கள் முந்தைய விலை விகிதத்தின் அடிப்படையில் 47 பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ள சம்மதித்து, ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்துதரக் கோரியுள்ளனர். தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தமிழக சட்டமன்ற தேர்தல் வர உள்ளதாலும் பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அனுமதி பெற்று, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கும் வரை M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்களின் மூலம் முந்தைய விலை விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 47 பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ளவும், மாதம் ஒன்றிற்கு அதற்காகும் தோராய செலவினம் (47*31*457) ரூ.665849/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை பொது நிதி / திடக்கழிவு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3922/2020/எச்1)**

**தீர்மான எண் 176 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** இந்நகராட்சியில் JET RODDING MACHINE REPAIR AND MAINTANANCE பணிக்கு ரூ.1.64 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 29.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | Whale Enterprise Private Limited | 0.10% குறைவு |
| 2 | SMS Enviro Engenerings And Frastructures Coimbatore | 2.0% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Whale Enterprise Private Limited, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.1232/2020/இ1)**

**தீர்மான எண் 177 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சியில் ANNUAL MAINTANANCE AND REPAIR WORK FOR THE BATTERY OPERATED VEHICLE YEAR 2021-22 (SWM) பணிக்கு ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 22.12.2020ம் தேதியன்று வரப்பெற்ற -கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | Priyam Industries & Engineering (PLT) | 0.10% குறைவு |
| 2 | Arun Indian Motors Salem | 2.00% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள Priyam Industries & Engineering P.L.T, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.3124/2020/இ1)**

**தீர்மான எண் 178 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**5. மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து 31.03.2018 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.எம்.ராஜன். மின் பணியாளர் நிலை-I பணி நியமனம் செய்தது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு WPNo.13362/2020 தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. திரு.லூர்து பால் மௌரியா, நகராட்சி சட்ட வழக்கறிஞர் அவர்கள் ரூ.15,000/- தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.835/2014/இ1)**

**தீர்மான எண் 179 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**6.** இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யத்தில் ரூ.74,87,489/- நிதி ஒதுக்கீடு செய்து, மேற்கண்ட நிதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை ( Dry Waste) அகற்ற Incinerator (SMT) நிறுவுவதற்கும், மேலும் உரக்கிடங்கிற்கு சுற்று சுவர் அமைக்கவும் கீழ்க்கண்ட விவரப்படி பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிக்காக Incinerator (SMT) நிறுவுதல் | 47.00 |
| 2 | சர்க்கார் தோட்டம் கோம்பூரான் காடு உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 28.00 |

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சியின் 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3858/2020/இ1)**

**தீர்மான எண் 180 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**7.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவிற்கு குப்பை அள்ள மற்றும் இதர பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN 52 S 2041 வாங்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் பேட்டரி பழுதடைந்து வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளதால், வாகனத்திற்கு புதிய பேட்டரி மாற்றிதர உத்தேச செலவீனம் ரூ.7500/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3771/2020/இ1)**

**தீர்மான எண் 181 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**8.** இந்நகராட்சியில் OUTSOURCING OF LABOUR ONLY FOR OPERATION & MAINTANANCE OF THE METTUR WATER SUPPLY IMPROVEMENT SCHEME (II nd Scheme) IN METTUR MUNICIPALITY பணிக்கு ரூ.36.32 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற -கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.N.Subramaniyan<br>No.1, Pudhuchampalli, Karuppu Reddiyar<br>Mettur | Rs.36.32<br>இலட்சம் | -0.01%<br>குறைவு |
| 2 | M/S KPS Engineering Condtruction<br>79/ Komburankadu, Karuppu Reddiyar (Po) | Rs.36.32<br>இலட்சம் | -0.37%<br>குறைவு |

<u>அலுவலக குறிப்பு.</u>

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட -0.37% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S KPS Engineering Condtruction, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.3463/2020/இ1)**

**தீர்மான எண் 182 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**9.** இந்நகராட்சியில் OPERATION & MAINTANANCE FOR STREET LIGHT FOR ROUTINE BRAKE DOWN MAINTANANCE PRIVATATION MAINTANANCE WORK பணிக்கு ரூ.40.63 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 11.11.2020ம் தேதியன்று வரப்பெற்ற -கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S P&B Enterprises,<br>No.1H, Sakthi Nagar, 46 Pudur, Erode | 40.63<br>இலட்சம் | -0.10%<br>Less |
| 2 | M/S J.P.Construction<br>83/95, Sivagannam Street, Namakkal | 40.63<br>இலட்சம் | -0.37%<br>Above |

<u>அலுவலக குறிப்பு.</u>

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட -0.10% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M M/S P&B Enterprises, Erode, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.2312/2020/இ1)**

**தீர்மான எண் 183 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**10. மேட்டூர் நகர பொது மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை டெங்கு காய்ச்சல் கொராணா தடுப்பு மற்றும் மழை காலங்களில் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஸ்டிக்கர் அச்சடித்து வழங்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

1. **திடக்கழிவு மேலாண்மை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை விபரம் குறித்த ஸ்டிக்க அச்சடிக்க** } **ரூ.7,500/-**

2. **கொராணா விழிப்புணவு (மாஸ்க்) முகக்கவசம் குறித்த ஸ்டிக்க அச்சடிக்க** — **ரூ.7,500/-**

3. **டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர் அச்சடிக்க** — **ரூ.7,500/-**

4. **மழைக்காலங்களில் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஸ்டிக்கர் அச்சடிக்க** — **ரூ.7,500/-**

**அலுவலக குறிப்பு.**

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தில் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**
3. **நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.3926/2020/எச்1)**

**தீர்மான எண் 184 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**11.** மேட்டூர் நகராட்சியில் காலியாக உள்ள தட்டச்சு பணியிடத்தில் நிரந்தர பணியாளரை பூர்த்தி செய்யும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட அரசிதழ் எண்.11-ல் 2020-2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சு பணிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.611/- விலை விகிதப் பட்டியல் வரப்பெற்றது. மேட்டூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 160 நாள்.23.11.2020-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. விலைப்புள்ளி கோரப்பட்டது. 02.12.2020 அன்று கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | ஆர்.மாதையன், ஒப்பந்தரார்<br>செட்டிப்பட்டி கோவிந்தப்பாடி (அ), சேலம் (மா)<br>636313 | ரூ.680/– |
| 2. | எம்.ராமசாமி,ஒப்பந்ததாரர்<br>வனவாசி(அ)<br>சேலம் மாவட்டம்<br>636457 | ரூ.700/– |
| 3 | எம்.சசிகலா<br>கணினி மையம்<br>192A4, பொன்னகர்<br>மேட்டூர் 636401 | ரூ.610/– |

**அலுவலக குறிப்பு.**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் எம்.சசிகலா, கணினி மையம் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் ஏற்கலாம்
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியமையை மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்

**(ந.க.எண்.4563/2020/சி1)**

**தீர்மான எண் 185 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**12.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கழிவு நீர் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். **TN 27 W 0535-க்கு** ஒவ்வொரு வருடமும் M/S.யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற காப்பீட்டு நிறுவனம் மூலம் காப்பீட்டு தொகை செலுத்தப்பட்டு வாகனக்காப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டுக்கான வாகனக்காப்பீடு 06.09.2020-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. தற்போது 12.12.2020 முதல் 11.12.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு வாகனக்காப்பீடு புதுப்பிக்க காப்பீட்டு தொகை ரூ.30,403/- செலுத்தக்கோரி M/S.யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்காணும் வாகனம் எண். **TN 27 W 0535-க்கு** வாகனக் காப்பீட்டு தொகை ரூ.30,403/-ஐ M/S.யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனம் மூலம் செலுத்தி வாகனக்காப்பீட்டினை புதுப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ). பொது சுகாதாரப்பிரிவில் கழிவு நீர் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். **TN 27 W 0535-க்கு** 2020-2021-ம் ஆண்டிற்கு வாகனக்காப்பீடு புதுப்பிக்க காப்பீட்டு தொகை ரூ.30,403/-ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/S.யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3467/2020/எச்1)**

**தீர்மான எண் 186 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**13.** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019-3, நாள்.15.12.2020-ல் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முடி திருத்தகம்/அழகு நிலையம்/ஸ்பா/மசாஜ் நிலையம் நடத்துவோர் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் /1920) பிரிவு 249-ன்படி தவறாமல் உரிமம் பெற்றுக்கொள்வது குறித்து **மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே ஏதேனும் ஒரு தமிழ்/ஆங்கில நாளிதழில் அறிவிக்கை விளம்பரம் செய்திடவும், அதற்காகும் தோராய செலவுத் தொகை ரூ.**15,000/-க்கும்** மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3409/2020/எச்1)**

**தீர்மான எண் 187 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**14.** திருமதி.சரோஜா க/பெ.துரைசாமி மற்றும் சிலர் ஓய்வூதியம் வழங்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி, வழக்கில் ஆணையாளர், மேட்டூர் நகராட்சி அவர்களை 3ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வழக்கினை ஏற்று நடத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் சேலம் மாவட்ட

நகராட்சிகளுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ள திரு. லூர்து பால் மௌரியா, வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2216/2020/எச்1)**

**தீர்மான எண் 188 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**15.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அலுவலக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் **PIU** பிரிவிலிருந்து **28.10.2020** அன்று வரப்பெற்ற தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மேட்டூர் நகராட்சி "100 சதவிகிதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி **(Open Defecation Free +)** பிரகடனப்படுத்துதல்" குறித்து மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம், சேலம் அவர்களின் வழியே **30.10.2020** அன்று தினத்தந்தி நாளிதழில் அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காண் விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவுத் தொகை ரூ.**8,316/-**ஐ தினத்தந்தி நாளிதழ் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.6203/2015/எச்1)**

**தீர்மான எண் 189 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**16.** இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு A, பிளாக் **222**, நகரளவு எண் **35** [ஆஸ்பத்திரி காலனி வார்டு **28**, குமரன் நகர்] உள்ள ஆக்கிரப்புகளை அகற்ற கூடாது என **1)**திருமதி சகுந்தலா, **2)**முனியம்மாள், **3)**அருணகிரி ஆகிய மூவரும் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.**11338/2020** மூலம் வழக்கு தொடர்ந்து அவற்றில் ஆணையாளர், மேட்டூர் நகராட்சி அவர்களை பிரிதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளார்**.**

எனவே இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.லூர்துபால் மௌரியா சென்னை அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் முழுவதிற்கும் மன்ற அனுமதியும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது**.**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2537/2020/எப்1)**

**தீர்மான எண் 190 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**17.** மேட்டூர் நகராட்சியின் பொறியியல் பிரிவில் சாலைப்பணியாளராக பணியாற்றிய திரு.சி.பொன்னுசாமி, வயது முதிர்வு காரணமாக **30.06.2017**–ல் ஓய்வு பெற்று விட்டார்.**01.10.1993** முதல் தினக்கூலி பணியாளராக பணியாற்றிய காலத்தினை கணக்கில் கொண்டு ஓய்வூதியம் வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.**16353/2020** மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை முதல் பிரிதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்துபால் மெளரியா நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டது. மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3618/2020/எப்1)**

**தீர்மான எண் 191 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**18.** இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு **15** தூக்கணாம்பட்டி கிழக்கு நகராட்சி துவக்கப்பள்ளி அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தை பொது மக்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற கூடாது என திருமதி கி.வசந்தி க/பெ. கிருபாகரன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.**19005** of **2020** மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மெளரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3651 /2020/ எப்1)**

**தீர்மான எண் 192 நாள் 30.12.2020**

## அனுமதிக்கப்பட்டது

**19.** மேட்டூர் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு. பெரியண்ணன் ஓட்டுநர் **30.06.1995** ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் **13.04.2014** இறந்து விட்டார்.( கொடு ஆணை எண் **7459** ) பார்வை **2**ல் கண்டுள்ள கடிதத்தின் படி சட்டபடியான வாரிசு குறித்து உறுதி செய்யும் பொருட்டு குடும்ப ஓய்வூதியம் கோரியுள்ள மனைவியாக திருமதி மாரியம்மாள் அவர்களால் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் மரபுரிமை சான்று பெற்று உரிய வழி முறையில் குடும்ப ஓய்வூதிய முன் மொழிவுகள் அனுப்பி வைக்கும் பட்சத்தில் தனியருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க பரிசீலிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டதால் திருமதி மாரியம்மாள் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண்.**39/2020** in IA.No **3/2020** மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு. TMA.இனியன், நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டது . மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3689/2020/ எப்1)**

**தீர்மான எண் 193 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**20.** மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள பெரியண்ணநகர் கதவு எண் ஏ124, மேட்டூர் அணை –1ல் வசிக்கும் திருமதி . மகேஸ்வரி , க/பெ. பன்னீர் செல்வம் என்பவர் தாவா சொத்தில் காம்பவுண்ட் சுவர் கட்ட கூடாது என நகராட்சி அலுவலக அதிகாரிகள் தடை செய்யப்பட்டதால் நிரந்தர தடையுத்தரவு கோரி மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 41/2020 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு. TMA.இனியன், நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டது . மேற்படி வழக்கிற்கு ஆகும் முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3513/2020/ எப்1)**

**தீர்மான எண் 194 நாள் 30.12.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**